படப்பை ஆ.மனோகரன் தலைமை! பொன்.இரமேஷ்கவி- ஏ.இ.பரசுராமன் வரவேற்புரை! குன்றத்தூர் தெற்கு ஒன்றியம்

அமரம்பேட்டில் மாபெரும் பொது மருத்துவ முகாம்! பழ மரக்கன்றுகள் - அறுசுவை உணவு வழங்கல்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. - வி.பி.கலைராஜன் துவக்கி வைக்கின்றனர்!

காஞ்சிபுரம், மார்ச் 15

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க., காஞ்சிபுரம் மாவட்ட இலக்கிய அணி, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி மற்றும் அமரம்பேடு ஊராட்சி தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆர்.எம்.டி. மருத்துவமனை பங்குபெறும் மாபெரும் பொது மருத்துவ முகாம், பழ மரக் கன்றுகள் வழங்குதல் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நாளை(16.03.2025) காலை 10.00 மணியளவில் அமரம் பேடு கன்னியம்மன் கோயில் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன், கழக பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக மக்களவை குழுத்தலைவர் டி.ஆர். பாலு, மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி. கலைராஜன் ஆகியோர் கலந்துகொண்டு துவக்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர், அமரம்பேடு ஊராட்சி மன்ற தலைவர் பொன்.இரமேஷ் கவி, ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர், அமரம்பேடு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ.இ.பரசுராமன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மு. சுப்ரமணி, வ.நந்தகோபால், இ.மணி, வாசுகிமகேஷ், சி. பார்த்தசாரதி, வி.அரி, மா.பரிமேலழகன் மு. ராஜேந்திரன், பொடவூர் பி.ரவி, க.சுகுமார், செ. ஜின்னா, கே.சுப்புராஜ், எஸ்.தேவேந்திரசுப்பு, ஜி. கே.லோகநாதன், த.மகேந்திரன், ஜெ.வேணுகோபால், ரா.நிஷாந்த், ச.குணசேகரன், ஜி.இருசப்பன், ம. அசோக்குமார், ஏ.இ.பஞ்சாட்சரம், ஏ.எஸ்.பாஸ்கரன், சு.அருண், வ.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஆர்.எம்.டி. மருத்துவமனை மேலாண்மை இயக்குநர் ரிபப்ளிக் ஸ்ரீதர், குன்றத்தூர் ஒன்றிய குழுத்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ. வந்தேமாதரம், உமாமகேஸ்வரிவந்தேமாதரம், கு.ஏழுமலை, எஸ். கர்ணன், ச.பாலகிருஷ்ணன், லட்சுமிஞானசேகர், மலர் விழிதமிழ்அமுதன், சங்கீதா வேலு, ஜி.ஏ.ராயப்பா, க.திணேஷ், ம.ரேவதி, எஸ். வைரம், கே.என்.சி.சத்திய மூர்த்தி, வி.எஸ்.கோதண்டராமன், ப.அறிவொளி, லோ.சுதாகர், ரா.தீபக்ராஜ், மா.சே.பிரகாஷ், க.பா.ஆடலரசு, பொன்.இளையபாரதி, அ.ஜமீர், இரா.குமரவேல்,

செ.பார்த்திபன், இ.பாலாஜி, ஆர்.சையத்ரமிஸ், மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகாநடராஜன், ஷோபாரகுநாதன், ப. வேல்முருகன், ச.ரஞ்சித்குமார், இரா.சந்திரசேகர், மூ.குமார், வ.வீரபாண்டியன், ர.தமிழ்தாசன், க.யுவராணி, மலர்விழி முருகன், வி.அன்பு, லட்சாவதிகருணாகரன், குமுதாசுமன், சங்கீதாவேலு, ராஜலட்சுமி ராஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

சு.அருண் நன்றியுரையாற்றுகிறார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தொகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது!

மதுரை, மார்ச். 15:

மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தொகுதி திமுக சார்பில் கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நாளை (16ஆம் தேதி) அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்திருக்கும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

அதன்விபரம்

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி தொடர்ச்சியாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதி திமுக சார்பாக நாளை 16.03.2025 ஞாயிற்றுக்கிழமைகாலை ஏழு மணி அளவில் அலங்கநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்திருக்கும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளது

இவ்விழாவை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமை ஏற்றுக் கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்

இதில் மதுரை வடக்கு மாவட்ட கழக மாநில நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., கருதியாகராஜன், எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், ஆசைக்கண்ணன், பொம்மதேவன், எம். சோமசுந்தரபாண்டியன், புதூர் சேகர், வடிவேல் முருகன், கே.தனச்செல்வம், ஜி.பி.ராஜா, நேரு பாண்டியன், பூபதி, ஆர்.கணேசன், வீர கணேசன், வழக்கறிஞர் கலாநிதி, கலை கார்த்திகேயன், மதுரை பாலா, டாக்டர் செல்வகுமார், டாக்டர் திலீப் ராஜகண்ணப்பன், நாகினி செந்தில்குமார், ஆர். கிருஷ்ணகுமார், நகர, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் முகமது யாசின், குமரன், கிருஷ்ணமூர்த்தி, பாலகிருஷ்ணன், ராஜராஜன், ராஜேந்திர பிரபு, பழனி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மேலூர் தொகுதி கழக நிர்வாகிகள். கழகத்தினர், கழக முன்னோடிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள்.

மேலும் பார்வையாளர்கள் குடும்பத்துடன் அமர்ந்து கட்டணம் இல்லாமல் கண்டுக்களிக்கும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஜல்லிக்கட்டு விழாவை கண்டு மகிழும் வகையில் மதுரையின் பல்வேறு பகுதியிலிருந்து சிறப்பு பேருந்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

ஒன்றிய அரசை கண்டித்து கோத்தகிரியில் கண்டனப் பொதுக்கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜீ அறிக்கை!

நீலகிரி, மார்ச் 15-

தமிழகத்தை வஞ்சித்து, புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியை திணிக்க முயலும் ஒன்றிய அரசை கண்டித்து, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கோத்திகிரி மார்க்கெட் திடல் பகுதியில் கண்டன பொதுக்கூட்டம் இன்று (15.3.2025 சனிக்கிழமை) மதியம் 3 மணியளவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிகுமார் தலைமையில் நடைபெற உள்ளது.

மாவட்ட துணை அமைப்பாளர் பத்மநாபன் வரவேற்புரையாற்ற, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பாபு, நவுபல், நாகராஜ், முரளிதரன் மற்றும் கழக முன்னணியினர் முன்னிலை வகிக்க உள்ளனர்.

தலைமை கழக பேச்சாளர் ராஜகம்பீரன் அப்பாஸ், இளம் பேச்சாளர் தஸ்லிமா நஸ்ரின் மற்றும் கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து சிறப்புரையாற்ற உள்ளனர்.

முடிவில்மாவட்டதுணை அமைப்பாளர் வினோத் குமார் நன்றி கூறுகிறார்.

கண்டன பொதுகூட்டத்தில் குன்னூர் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகர -ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், குறிப்பாக குன்னூர் தொகுதிக்கு உட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூட்டம் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் இளைஞர் அணி நிர்வாகிகள் சிறப்புடன் செய்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னையில்

நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து மராத்தான் ஓட்டம்!

தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, மார்ச்.15-

தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமை தினத்தைக் கொண்டாடிடும் பொருட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கல்வி நிறுவனங்களில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மூலமாக தமிழ்நாடு அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த மராத்தான் ஓட்டம் நாளை (15.03.2025) காலை 06.30 மணியளவில் சென்னை தீவுத்திடலில் நடைபெற உள்ளது. இம்மராத்தான் ஓட்டத்தில் பள்ளி / கல்லூரி, மாணவ / மாணவியர்கள் 2000 பேர் பங்கேற்க உள்ளார்கள்.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடைபெறும் இம்மராத்தான் போட்டியினை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு சென்னை தீவுத்திடலிருந்து கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்கள்.

தீவுத்திடலில் ஆரம்பித்து அண்ணாசாலை, சிவானந்தா சாலை வழியாகச் சென்று திரும்பவும் தீவுத்திடலுக்கு வந்து மராத்தான் ஓட்டம் நிறைவு பெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பங்கு பெறும் அனைத்து பள்ளி / கல்லூரி, மாணவ / மாணவியர்களின் நலன் கருதி, தொடர் ஓட்டத்திற்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளான போக்குவரத்து, குடிநீர் வசதி, மருத்துவ உதவி உள்ளிட்டவை செய்யப்பட்டுள்ளன.

முதல்வர் பிறந்த நாள் விழா! ஒன்றியச் செயலாளர் பொன்சிவக்குமார் தலைமை!

மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் நலத்திட்ட உதவிகள்- மாபெரும் பொதுக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. - ஒப்பிலாமணி - டி.சிலம்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச், 15

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி, மதுராந்தகம் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் நிதிப்பகிர்வில் பாரபட்சம், இந்தித் திணிப்பு, தொகுதி மறு சீரமைப்பு அநீதி ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (15.3.2025- சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு மேலக்காண்டை, கால்நடை மருத்துவமனை அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்க ஒன்றியக் கழகச் செயலாளர் பொன். சிவக்குமார் தலைமை வகிக்கிறார். என்.செல்வபிரதாப், டாக்டர் கே.ஆறுமுகம், இ. சங்கர், கே.பொற்செல்வி குமார், எஸ்.தைரியலட்சுமி, இ.ஜோதிலிங்கம், வி.எம். கே. சக்திவேல், எஸ்.ஜெயக்குமார், கே.சீனுவாசன் வி.பி. சிட்டிபாபு, ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

கே.சசிகுமார், வி.வெங்கடேசன், பொன்.சக்கரபாணி, ஏ.ஜி.ஆர். சுமித்ராதேவி, து.குமார், வி.தனபால், பத்மாசெல்வராஜ், ரோக்ச்காய ராஜ், ஜி.டி.எம்.தெய்வசிகாமணி, மு.ச.டில்லிபாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் ஒப்பில்லாமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

டி.சிலம்பரசன், க.செல்வம் எம்.பி., ப.அப்துல்மாலிக், ஜி.பிரபு கஜேந்திரன், அ.யுவராஜ், அ.ஆண்டோ, வி.தர்மலிங்கம், வி.ஸ்ரீதர், செம்பருத்திதுர்கேஷ், எஸ். சசிரேகா, பி.ராஜாராமகிருஷ்ண, ஓ.எஸ்.தினகரன், பி.இளங்கோவன், ஜெ.ஜெய் சங்கர், ஜெ.அரசு, வி.தணிகைஅரசு, வி.ஜெயந்திவாசுதேவன், டாக்டர் எஸ்.சிவா, எம்.எஸ்.ஜெ.இளம்பாரதி, ஜி.பி.ஸ்டீபன்சபரி, பி. ராஜன்பாபு, சுஜாதா ஜெய் சங்கர், பிரியாசக்கரபாணி,லதா மனோகரன், செல்லம்மாள் ஜெயராமன், தணி பாஸ்கர், ஜெ.அரிகிருஷ்ணன்,கோமதி வேலு, பி.சக்திவேல், பி.கேசவேல், சுகுணாசண்முகம்,செல்விராஜேஷ், டி.சிவக்குமார், ரேவதி தரணிபதி, சுகன்யா ஏக்நாத்,இளவரசி ஜெயசீலன், வேளாங்கன்னி, ஜெய பிரகாஷ், தேவி அரசு, பானுமதி பாலு,கே.பாஸ்கரன், இரா. கருணாநிதி, அன்பு ராமு, சுகந்தாமணி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எம்.சி.டி.தினேஷ் நன்றி கூறுகிறார்.

தா.இளையஅருணா தலைமை! ஆர்.டி.சேகர் முன்னிலை!

இராயபுரம் 51 (அ) வட்டத்தில் நலத்திட்ட உதவிகள் - பொதுக்கூட்டம்!

ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., சூர்யா கிருஷ்ணமூர்த்தி - இரா.செந்தில்குமார் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 15-

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 51 (அ) வட்டம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் 10.03.2025 அன்று மாலை 6.30 மணிக்கு ஆண்டியப்பன் முதலி தெரு துர்கா பவன் ஹோட்டல் எதிரில் பி கண்ணன் 51அ வட்டச் செயலாளர் தலைமையில் மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் தலைமை செயற்குழு உறுப்பினர், தா. இளைய அருணா சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி பகுதிச் செயலாளர் இரா செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முதல மைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை தலைமை கழக பேச்சாளர் சூரியா கிருஷ்ண மூர்த்தி உரையாற்றினார்.

கூட்டத்தின் முடிவில் மாற்றதிறனாளியான கழகத் தோழர் அருள்நாதன் அவர்களுக்கு சுயமாக தொழில் தொடங்கிட ரூபாய் அய்யாயிரம் மதிப்புள்ள துணிவகைகள் பெண்களுக்கு தையல் இயந்திரம் சலவை தொழிலாளிக்கு பித்தளை இஸ்திரி பெட்டி ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை பொதுமக்களுக்கு வேட்டி சட்டை புடவை ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம். ஆர். மூர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர் தா இளைய அருணா ஆகியோர் வழங்கினர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பி.டி.பாண்டிச்செல்வம் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி பொதுக்குழு உறுப்பினர்கள் நா சண்முகம் கி. ராஜேந்திரன்பகுதி நிர்வாகிகள் த.ஜெயபால், பி. சேகர், கு.சுந்தர் லோ மோகன் பி. ஜெயலட்சுமி கு ரமேஷ் எஸ் திருஞானம் இ மதன் வட்டச் செயலாளர்கள் ஆர்.வி..கணேஷ் கா.கலைச்செல்வன் பாலா லட்சுமணன் இரா.பாலன் ஜே கௌரிசங்கர் எஸ். புகழேந்தி,

என் கிருஷ்ணன் கே கோவிந்தராஜ் மாவட்ட பிரதிநிதிகள் வி குமார் பி.வி ஆறுமுகம் ஆர் ஏகாம்பரம் இரா.மருது பாண்டியன் பிரபுடேவிட் எஸ் ஏ ராஜா கே பாரூக் பாஷா எஸ் ரவிக்குமார் எ ரமேஷ் பி ராஜி டி தனபால் கே ஐயப்பன் . வி மணிகண்டன் எம்.செல்வம் புக்ஸ் ஸ்டால் கண்ணன் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பி செந்தில்குமார் லியோ டி சுரேஷ் கார்த்திக் செங்குட்டுவன கா கோவிந்தசாமி Ad.ஜே கே.நாதன் கட்பீஸ். பா சோமசுந்தரமூர்த்தி கே என் பார்த்திபன் அத்தோ பி முனுசாமி, ஐ.சி. எப். பழனி, ஆர்.டி.ஜெய சங்கர், வி.கே.ராஜ், பி. சதீஷ்குமார், லாட்டுக்கடை செந்தில், டில்லி ரங்கா, என்.மாலிக், கோ. வேல் மணி, எம்.செல்வம், கோ.ஹரிஷ் குமார், டாஸ் மார்க் சிவா, எஸ். ஜோஸ்வா, எம்.எம்.செந்தில்குமார், பி.அன்சர் மற்றும் ஆர். முனுசாமி, ஆர். மாணிக்கம், ஆர்.அருள் நாதன், ஜே.ராஜ்குமார், எம்.சிவகுமார், ஐ. தீபன் ராஜ், சாகுல் பாய், ஜி.கருப்பையா, எ.கணேசன், எ.குழந்தைவேல், ஏ. ஆசை குமாரன்,

கவி பாரதி, எ.எமர்சன்ற் ஜெய் நடராஜ், ஆர்.ஜெயக்குமார், எச். பாஸ்கர், வி. செல்வம், வி.சரவணன், டி.வி.எஸ்.தங்கராஜ், டி.தனசேகர், எஸ். கண்ணன், வி. யுவராஜ், ஜி.சந்திரமோகன், பி.சிவகுமார், ஆர்.மதன கோபால், கே. சீனிவாசன், பி.எட்டியப்பன், ரூபன், மகிமை ராஜ், பி.முருகன், எஸ்.மோகன், என்.சந்தோஷ், ஏ.ஹரிகரன், ஆர். விஜயன், இ.நரேஷ், ஆர். கண்ணன், ஒய்.சூர்யா, எம். கே.சாகுல் ஹமீது, குமார், டி.மல்லிகா, ஆர்.தனலட்சுமி, நான்சி எஸ்.தேவி, இயேசு என்.ஹேமலதா, கோமதி, சுமதி, ஏ.மாரியம்மாள், எஸ்.லதா.

வட்டதுணைச் செயலாளர் டி.சகாயம் நன்றி கூறுகிறார்.

தென்காசி மாவட்டம் – குற்றாலத்தில்

1000 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு - தாலிக்கு தங்கம் வழங்கல் விழா!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

தென்காசி.மார்ச்.15

தென்காசி மாவட்டம் குற்றாலம் சமுதாய நலக்கூடத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை திட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பில் 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா மற்றும் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தாலிக்குத் தங்கம் வழங்கும் விழா நேற்று முன்தினம் (08.03.2025) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் பெண்கள் நலனில் அக்கறை கொண்டு பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள், அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் 2024-2025 ஆம் ஆண்டு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தலா ஒருவருக்கு 8 கிராம் தங்க நாணயம் வீதம் 50 பயனாளிகளுக்கு ரூபாய்.30,42,600 மதிப்பிலான தங்க நாணயம் மற்றும் சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு ரூபாய்.1,10,768 மதிப்பிலான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சமுதாய வளைகாப்பின் பொழுது பயனாளிகளுக்கு வளைகாப்பு செய்து தட்டு,சேலை, குங்குமச்சிமிழ்,மஞ்சள் கயிறு, வளையல்,தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம்,கொய்யாபழம், நெல்லிக்காய், முருக்கு, அதிரசம், ஐந்து வகையான சாதங்கள் (சாம்பார் சாதம், தயிர் சாதம்,தேங்காய் சாதம், புளியோதரை, சர்க்கரை பொங்கல்) போன்ற சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, பெண்கள் அனைவரும் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார் (தென்காசி)ஈ.ராஜா (சங்கரன்கோவில்) சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்)மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன்,தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,மாவட்ட சமூக நல அலுவலர் சுமதி,தலைமை மருத்துவ அலுவலர் மரு. மோதி, மாவட்ட திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டமையம்) ராஜ பிரியா, சமூக நலன்

மற்றும் மகளிர் உரிமைத் துறை கண்காணிப்பாளர் காட்வின் வேத ஞானராஜ், தென்காசி வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் மங்களநாயகி,குற்றாலம் பேரூர் செயலாளர் குட்டி என்ற சங்கர் உள்பட அனைத்து வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், தென்காசி வட்டார அங்கன்வாடி பணியாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் சார்பில் 04 மகளிர் விடியல் பயண புதிய BS-VI நகரப் பேருந்துகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.